முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில், திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ. ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ். கல்யாணசுந்தரம், செ. இராமலிங்கம், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே. ஜி. நீலமேகம், நா. அசோக்குமார், பூண்டி கலைவாணன், கா. அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி, மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி. பாலச்சந்திரன், , தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2023) தஞ்சாவூர், முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அரங்கில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் தொகுத்த "தாய் வீட்டில் கலைஞர் நூலினை வெளியிட்டார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ். கல்யாண சுந்தரம், செ.இராமலிங்கம். தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், அரசு தலைமைக் கொறடா கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை. சந்திரசேகரன், டி.கே.ஜி. நீலமேகம், நா. அசோக்குமார். பூண்டி கலைவாணன், கா. அண்ணாதுரை, நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள். முன்னாள் உறுப்பினர்கள், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ,மதிவாணன், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி ஜி.எம். அக்பர் அலி. மேற்கு வங்க மாநில முன்னாள் தலைமைச் செயலாளர் ஜி. பாலச்சந்திரன், தஞ்சை மாநகராட்சி மேயர் சண். இராமநாதன். துணை மேயர் டாக்டர் அஞ்சுகம்பூபதி, திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன், சமூகநீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், தவத்திரு பாலபிரஜாபதி அடிகளார், திராவிடர் கழக செயலவைத் தலைவர் அறிவுக்கரசு, பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் மற்றும் திராவிடர் கழகத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமைகள் அதிகரித்துள்ளது என்ற

ஆளுநரின் கூற்று வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும்!

விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம்!

சென்னை, அக். 7-

தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் ஆளுநரைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நீண்ட நெடும் காலமாக சமூக நல்லிணக்கம் நீடித்து வரும் தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுகைள் அதிகரித்திருப்பதாக சனாதான ஆளுநர் ரவி கூறியிருப்பது வன்மையாகக் கண்டத்திற்குரியதாகும். இது உள்நோக்கம் கொண்டதாகும். சாதி பாகுபாடுகளை உருவாக்கி மனிதர்களைப் பிரித்து, அடிமைப்படுத்தியது ஆளுநர் ரவி அவர்களைதலை மேல் தூக்கி வைத்து கொண்டாடும் சனாதனமாகும். அந்த சனாதானத்தை இந்த மண்ணில் இருந்து வேரோடு அகற்றிட தந்தை பெரியார் தொடங்கி தொடர்ந்து தமிழ்நாட்டில் பல்வேறு தலைவர்கள் களம் கண்டதினுடைய விளைவு தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் சமூக நல்லிணக்கம் மேலோங்கி நிற்கிறது.

சனாதனமும், வருணாசிரம தர்மமும் ஏற்படுத்திய அந்த சாதி பாகுபாட்டை அடித்து நொறுகிட வேண்டுமேயானால் அடித்தட்டு மக்களுக்கு கல்வியும் அதன் மூலம் பொருளாதார மேம்பாட்டையும் தந்தாக வேண்டும். அதற்கான ஒரு கருவி தான் இட ஒதுக்கீடு. சமூகநீதியை நிலைநாட்டிய இந்த இட ஒதுக்கீட்டை முதன்முதலில் நடைமுறைப்படுத்தியது தமிழ் மண். இந்திய அரசியல் சட்டம் முதன் முதலில் திருத்தப்பட்டதே இந்த இடஒதுக்கீடு கொள்கைக்காக தான். அதனை செய்து முடித்தது தமிழ் மண் என்பதை சனாதன ரவி உணர வேண்டும்.

இப்படிப்பட்ட தொடர் நடவடிக்கை காரணமாக தான் இன்றைக்கு தமிழ் நாட்டில் சமூக நீதி ஓங்கி நிற்கிறது. அதன் விளைவாக இந்தியாவின் உயர்கல்வி பெற்றோர்களின் சராசரி 26.1 விழுக்காடு என்றால் தமிழ்நாட்டில் உயர் கல்வி பெற்றவர்களின் விழுக்காடு 51.7 ஆக உள்ளது. இந்தியாவிலேயே கல்வி, சுகாதாரத்தில் முதன்மை இடத்தை பெறக்கூடிய நிலையை தமிழ்நாடு அடைந்திருப்பதற்கு காரணம் தமிழ்நாட்டு அரசின் கொள்கையாகும். இன்றைக்கு வடநாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரத்திற்கு வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய மண்ணாக தமிழ் மண் விளங்கிக் கொண்டிருக்கிறது. இவையெல்லாம் சாதி, மத பேதங்களைக் கடந்து, சமூக நல்லிணக்கத்தை பேணிக்காத்து, சமூக நீதியை நிலைநாட்டுவதற்கான கொள்கைகளை தமிழ்நாடு அரசு நடைமுறைப்படுத்தியதின் விளைவேயாகும். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு ஆளுநர் தமிழ்நாட்டில் சாதிய வன்கொடுமைகள் நிலைத்திருப்பதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும்.

ஆளுநர், பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்கு சேகரிக்கும் வேலையை தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார். தற்போது நந்தனார் பிறந்த மண்ணான கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோயில் அருகில் உள்ள மா.ஆதனூரில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பூணூல் அணிவித்திருக்கிறார். இதன் மூலம் அந்த மக்கள் மேன்மை பெறுவர் என்பது எந்த பொருளாதார கொள்கை என்பதை இந்த பொருளாதார மேதை ஆளுநர் ரவி விளக்கிட வேண்டும். பூணூல் அணிவது என்பது வருணாசிரதர்மத்தின் ஒரு அங்கமாகும். பிராமணியம் தான் பூணூல் அணிவதை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது. பூணூல் அணிந்து இருந்தால் அவர் பிராமணன், மேட்டுக்குடியினர், போற்றப்பட வேண்டியவர் என்பது அவர்களுடைய மனுதர்ம சித்தாந்தமாகும். எனவே தலித் மக்களுக்கு பூணூல் அணிவதன் மூலம் அவர்களையும் மேட்டுக்குடி மக்களாக மாற்றிவிட்டதாக எண்ணுகிறாரா ஆளுநர்? பூணூல் அணிந்தால் மேட்டுக்குடியாகி விடுவார்கள் என்பது மக்களை ஏமாற்றும் முயற்சி மட்டுமல்ல மீண்டும் சனாதனத்தை மறைமுகமாக இந்த மண்ணில் ஊன்றும் முயற்சியாகும். சிதம்பரம் நடராஜரை தரிசிக்க சென்ற நந்தனாரை தடுத்து நிறுத்தி கொளுத்தி சாம்பலாக்கி, அவர் சென்ற பாதையை இன்று வரை அடைத்திருப்பது சனாதானத்தின் உச்சமாகும். ஆளுநருக்கு உண்மையிலேயே நந்தனார் மீது அக்கறை இருக்குமேயானால் சிதம்பரம் கோவிலில் அடைக்கப்பட்ட அந்த பாதையை திறந்து, நந்தனார் சென்ற பாதையில் அனைவரும் சென்று நடராசரை தரிசிக்கலாம் என்று அறிவித்திருந்தால் கூட அவருடைய செயலை நாம் புரிந்து கொள்ள முடியும். அதை விடுத்து ஆதிதிராவிட சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு பூணூல் அணிவிப்பது மக்களை ஏமாற்றும் முயற்சியாகும். திசை திருப்பும் ஏமாற்று வேலையாகும். ஆளுநரின் இந்த தகிடுதித்த வேலைகள் எல்லாம்தமிழ் மண்ணில் ஒருபோதும் எடுபடாது.

ஆளுநர் செய்ய வேண்டிய ஆயிரம் வேலைகள் காத்திருக்கிறது. அடித்தட்டு மக்களுக்கானத் திட்டங்கள் குறிப்பாக, மாணவர்களின் எதிர்காலத் திட்டங்களுக்கான மசோதாக்கள் ஆண்டு கணக்கில் ஆளுநர் மாளிகையில் தூங்கிக் கிடக்கிறது. அவற்றை தூசி தட்டி எடுத்து பார்க்க ஆளுநருக்கு நேரமில்லை. அதைவிடுத்து சனாதனத்தை பரப்புவதிலும் பாரதிய ஜனதா கட்சிக்கு வாக்கு சேகரிப்பிலும் கவனம் செலுத்தி செயல்பட்டு வருகிறார். அவருக்கு அதில் ஆர்வம் இருந்தால் ஆளுநர் பதவியை ராஜினாமா செய்து விட்டு சனாதனத்தை கையில் எடுத்து, பாரதிய ஜனதாவுக்கு வேலை செய்யட்டும்.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நேற்று (06.10.2023) கோட்டூர்புரத்திலுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற விழாவில் TCS Ion, IIT Pravartak Technologies Foundation, Coca Cola போன்ற முன்னணி நிறுவனங்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , சிறப்புத் திட்ட செயலாக்கத்துறைச் செயலாளர் தாரேஷ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.